[2010 ஏப்ரல் 7

23—

பொறியியல் கல்லூரி

***49395—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதியில் அரசுப் பொறியியல் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மொரப்பூர் தொகுதியில் அரசுப் பொறியியல் கல்லூரி தொடங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் *9–50*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டிலே கல்வித் துறையில் மிகப் பின்தங்கிய மாவட்டம் என்பது இந்த மாமன்றம் அறிந்த ஒன்று. தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பொறியியல் கல்லூரி துவங்கப்படும் என்று அறிவித்ததன் அடிப்படையில் நடப்பாண்டில் தருமபுரி மாவட்டத்தில் மொரப்பூர் தொகுதியில் ஒரு பொறியியல் கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது தமிழகத்தில் அரசுப் பொறியியல் கல்லூரிகள் ஆறும், அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மூன்றும், கலைஞர் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலமாக

2010 ஏப்ரல் 7]

உருவாக்கப்பட்டிருக்கிற உறுப்புக் கல்லூரிகள் ஏழும், திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள கல்லூரிகள் ஏழும், திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகக் கல்லூரிகள் இரண்டும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பாலிடெக்னிக் ஆரம்பிக்க வேண்டுமென்ற மத்திய அரசின் யோசனையின்படி அதற்கான ஏற்பாடும் 27 இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு முன்பே அறிவித்திருக்கிறேன். குறிப்பாக, தருமபுரி, பக்கத்திலேயிருக்கிற சேலம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் தனியார் பொறியியல் கல்லூரிகள் அதிகம் இயங்குகின்றன. தருமபுரி மாவட்டத்திலே இயங்குகிற பொறியியல் கல்லூரிகளில் இப்பொழுதுகூட 800 இடங்கள் காலியாக இருக்கின்றன. சேலம், கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களிலே இருக்கிற தனியார் பொறியியல் கல்லூரிகளிலும் அதிக இடங்கள் காலியாக இருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பிறகு, இப்போது இடம் காலியாக இருக்கிறது என்று சொல்லுகிற அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. Supply இப்போது அதிகமாக இருக்கிற காரணத்தால் தேவையும் இன்னும் அதிகரிக்குமானால் அதற்கேற்ப கல்லூரிகளை உருவாக்குகிற முயற்சிகளை இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல பொறியியல் கல்லூரிகளில், தனியார் கல்லூரிகளில் பணம் கொடுத்துப் படிக்கமுடியாத ஏழை, எளியவர்கள் நிரம்ப இருக்கிறார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் நிரம்ப இருக்கின்ற பகுதிகள்தான் பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், மொரப்பூர் போன்ற தருமபுரியை ஒட்டியிருக்கின்ற ஒன்றியங்கள். இந்தப் பகுதிகளில் தனியார் பொறியியல் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ இல்லாத சூழ்நிலையில், பொறியியல் கல்லூரியை இந்த ஆண்டு தொடங்க இயலாவிட்டாலுங்கூட, மத்திய அரசின் சார்பாக 7 பலதொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்குவதாக நம்முடைய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, பலதொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒன்றையாவது இந்த தருமபுரி

[2010 ஏப்ரல் 7

மாவட்டத்தை ஒட்டியிருக்கிற, இன்னும் சொல்லப்போனால் ஒடசல்பட்டி கூட்டுரோட்டை மையமாக வைத்து, தொடங்கினால் அந்த மாவட்டத்தினுடைய தேவை முழுமை பெற்று தொழில் கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பிருக்கும். எனவே, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் நிரம்ப இருக்கிற, வறுமையிலே வாடுகின்ற மக்கள் நிரம்ப இருக்கிற அந்தப் பகுதியில் பலதொழில்நுட்பக் கல்லூரியையாவது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து நடப்பாண்டிலேயே அந்த பலதொழில்நுட்பக் கல்லூரியை எங்களுக்கு உருவாக்கித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். உருவாக்கித் தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத்தான் பெண்ணாகரம் தொகுதியிலே ஒரு அரசுக் கலைக் கல்லூரி இந்த ஆண்டு முதலே துவங்கப்படவிருக்கிறது. அதுவும் தருமபுரி மாவட்டத்தில்தான் அமைய இருக்கிறது. அதுமட்டுமல்ல, குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலேயும் ஒரு அரசுக் கல்லூரி இருக்கிறது. சேலம் மாவட்டத்திலும் அரசுக் கல்லூரி இருக்கிறது. இங்கும் அரசுக் கல்லூரி துவக்க வேண்டுமென்ற ஆசை அரசுக்கு இருந்தாலும்கூட நிதிநிலைக்கேற்ப அந்த முடிவு எடுக்கப்படும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருந்ததுபோல பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைத் துவக்குவதற்கான முயற்சிகளை, மாண்புமிகு முதல்வரோடு கலந்து இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் தனியார் பொறியியல் கல்லூரிகள் 2 மட்டும்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே, அந்த மாவட்ட மாணவர்களுடைய நலனைக் கருதி சிவகங்கையில்

2010 ஏப்ரல் 7]

அரசுப் பொறியியல் கல்லூரி துவங்கப்படுமா என்று உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைத் தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு சிவகங்கையிலே இயங்கக்கூடிய மன்னர் அரசு கலைக் கல்லூரியிலும், மகளிர் கலைக் கல்லூரியிலும் பட்ட மேற்படிப்புகள் தொடங்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். கடந்த முறை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் அறிவிப்புகள் வெளியிடாத நிலையில், அந்தப் பட்ட மேற்படிப்புகளையும் இணைத்து அறிவிப்புத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்புக்கான விண்ணப்பங்கள் அந்தந்தப் பல்கலைக் கழகங்களுக்கும், அரசுக்கும் அனுப்பப்பட்டிருக்குமானால் நிச்சயமாக அது வருகின்ற கல்வியாண்டில் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் இப்போது தனியார் கல்லூரிகளும், அரசுக் கல்லூரிகளும் அதிகமாகவே இருக்கின்றன. இப்போது அந்தக் கல்லூரிகளில் இடங்கள் காலியாக இருக்கின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. இந்த ஆண்டுகூட A.I.C.T.E.—யிடம் 100 பேர் விண்ணப்பித்திருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, போகிற போக்கைப் பார்த்தால் கலைக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களைவிட பொறியியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள்தான் அதிகம் இருப்பார்கள் என்ற ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையை மாற்றியமைத்து கலைக் கல்லூரிகளில் கலைப் பாடங்களும் வளரவேண்டும் என்பதிலே இந்த அரசு முக்கிய கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. ஆகவே, கலைப் பாடங்களை வளர்க்கின்ற அந்த நோக்கத்தோடு கலைக் கல்லூரிகளிலே இந்த ஆண்டு முதல் பட்ட மேற்படிப்பு படிக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாகக் கல்வி வழங்கப்படும்.

இந்த அறிவிப்பையும் கலைஞர் அவர்கள் அறிவித்திருப்பது பட்ட மேற்படிப்பை ஊக்கப்படுத்துவதற்காகத்தான். ஆகவே, பட்ட மேற்படிப்புக்கான உங்களுடைய விண்ணப்பங்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்ட அமைச்சர், வேங்கையின் மைந்தன் அவர்களும், கடலூரில் ஒரு அரசு விழாவில் இருந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எங்கள் தொகுதிக்கு ஒரு பொறியியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டேன். அதை அன்போடு வரவேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மேடையிலேயே, தமிழ்நாட்டில் முதன்முதலாக பொறியியல் கல்லூரியை பண்ருட்டிக்கும், விழுப்புரத்திற்கும் அறிவித்தார்கள். அறிவித்த பிறகு கடந்த மூன்று ஆண்டுகளாக அது ஒரு தனியார் வீட்டில் இயங்குகிறது. மாணவ, மாணவிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். அந்த வீட்டைக்கூட நான்தான் வாடகைக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறேன். இதுவரையிலும் அங்கு போதுமான கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டும், தாங்கள் நிதி ஒதுக்கியும்கூட அந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. கான்ட்ராக்டர் சம்பந்தமான பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். திருச்சி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மாற்றப்பட்ட காரணத்தால், நிதி ஒதுக்கம் செய்கின்ற அதிகாரம் இல்லாத காரணத்தால்தான் தொடங்கப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். ஆதலால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் நான் பார்த்து வைத்த வேண்டுகோளை ஏற்று கல்லூரியும் திறக்கப்பட்டு, அங்கு இன்னும் கட்டடம் பல கோடி ரூபாயில் உருவாக்கப்படாமல் இருக்கிறது. இதை உடனடியாக தொடங்கவும், வகுப்பறைகளில் மாணவர்கள் அமர்ந்து சீரான கல்வியை, பாதுகாப்பான கல்வியைப் பயில்வதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2010 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றை விட்டுவிட்டார்கள். திண்டிவனம் பகுதியிலும் ஒரு கல்லூரியை சேர்த்து அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். திண்டிவனம், விழுப்புரம் ஆகிய இரண்டு இடங்களிலேயும் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பண்ருட்டியில் கட்டுவதற்கு டெண்டர் விடும் பணி முடிவுற்றிருக்கிறது. வெகு விரைவில் அதற்கான அடிக்கல் நாட்டு விழாவினை நானே வந்து நடத்தி அடுத்த மாதத்திற்குள்ளாகவே அந்தப் பணிகளைத் தொடங்கி வைக்கிறேன். விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படும். (குறுக்கீடு) அதற்கான நிதியை பல்கலைக்கழகங்கள் ஒதுக்குகின்றன. அதன்மூலமாக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக உடனடியாக அப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

திரு. மு. பரஞ்ஜோதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளிலே அட்மிஷன் தொடங்கக்கூடிய இந்த நேரத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் சார்பாக நடக்கக்கூடிய கவுன்சிலிங்கை தமிழ்நாட்டினுடைய மையப் பகுதியாக இருக்கக்கூடிய திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்திலே நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை அது பரீட்சார்த்தமான முறையில் பரிசீலிக்கப்பட்டது. அதிலே பல சங்கடங்கள் இருந்த காரணத்தினால்தான் மீண்டும் மாணவர்களுக்கு பேருந்துச் சலுகைகள், கட்டணச் சலுகைகள் எல்லாம் வழங்கப்பட்டு ஒரே இடத்தில் நடைபெற்றால்தான் அது விரைவுபடுத்தப்படும் என்ற

நோக்கத்தோடு சென்னையிலே மட்டுமே அது நடத்தப்படவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திருச்சியிலோ அல்லது மற்ற இடங்களிலோ நடத்தும் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.*

திரு. அருள் அன்பரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் புதிய சட்டமன்றத்திலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த எங்கள் குடும்ப அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், 86 வயதிலும் இந்தியாவிற்கே ஒரு முன்னோடி முதலமைச்சராக விளங்கிக்கொண்டிருக்கும் மூத்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மகளிருக்கு சுழல் நிதி தந்த இளைய தளபதி அவர்களுக்கும் எனது நன்றியினைக் காணிக்கைப் பூக்களாக்குகிறேன். சோளிங்கர் தொகுதியில் ஒரு பொறியியற்கல்லூரி அமைக்க வேண்டும் என்று பல முறை நான் கோரிக்கை வைத்துள்ளேன். தொகுதி மக்கள் சார்பாக பல முறை நான் கேட்டும் இதுவரை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு கனிவான பார்வை எனது தொகுதி மக்கள் மேல் வரவில்லை. வேலூர் மாவட்டம் ஒரு வறட்சி மாவட்டம்.*

அங்கே மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்குக் கல்வியிலே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றால், அவர்களுக்குப் பலவிதமான திட்டங்களை, வேலூர் மாவட்டத்திலே, குறிப்பாக, சோளிங்கர் தொகுதிக்கு நீங்கள் வழங்கவேண்டும். வேலூர் மாவட்டம் என்று வந்தாலே, பல திட்டங்களை மண்ணின் மைந்தர் அண்ணன் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் தட்டிச் சென்றுவிடுகிறார்கள்.

முற்பகல் 10—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அருள் அன்பரசு, சப்ஜெக்ட்டுக்குள்ளே வாருங்கள். ஜெனரலாகப் பேசாதீர்கள்.*

திரு. அருள் அன்பரசு: *பொறியியல் கல்லூரிதான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஜெனரலாகப் பேசாதீர்கள், சப்ஜெக்ட்டை மாத்திரம் கேளுங்கள்.*

2010 ஏப்ரல் 7]

திரு. அருள் அன்பரசு: தொகுதி மக்களுக்காக கோரிக்கையைத்தான் வைக்கிறேன். மீதமுள்ளதை அண்ணன் ராணிப்பேட்டை காந்தி அவர்களும், வேலூரில் இருக்கின்ற அண்ணன் ஞானசேகரன் அவர்களும் தட்டிச் சென்றுவிடுகிறார்கள். பிறகு என் தொகுதி மக்கள் அண்ணாந்து பார்க்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. என் தொகுதி மக்கள் சார்பாக நான் கோரிக்கை வைக்கிறேன். எனவே, சம்பந்தப்பட்ட துறை அமைச்சரவர்கள் சோளிங்கர் தொகுதியில் தனிக் கவனம் செலுத்தி, எங்கள் பகுதியில் ஒரு பொறியியல் கல்லூரியைத் தொடங்குவதற்கு முயற்சி எடுக்கவேண்டும். அதற்கு வழிவகை செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஓர் அரசு பொறியியல் கல்லூரி என்ற அடிப்படையிலே வேலூர் மாவட்டம், வேலூரிலே நீண்டகாலமாக அரசு பொறியியல் கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் தொகுதிக்கு ஒன்று, பிறகு வட்டத்திற்கு ஒன்று, யூனியனுக்கு ஒன்று இப்படியெல்லாம் கேட்பதற்கு உங்களுக்கு பொறுப்பு இருக்கிறது. இருந்தாலும்கூட, அரசாங்கத்தின் நிதியாதாரத்தைப் பொறுத்தும், அந்தப் பகுதியின் தேவைகளைப் பொறுத்துமே முடிவு செய்யப்படுகிறது. வேலூர் மாவட்டத்திலே, வேலூரிலே நீண்டகாலமாக ஓர் அரசுப் பொறியியல் கல்லூரி இருக்கிறது. சோளிங்கரிலேயும் ஒரு தனியார் பொறியியல் கல்லூரி இருக்கிறது. அந்தத் தனியார் கல்லூரியிலேயும் இன்னும் பாதி இடம்கூட நிரப்பப்படாத சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, எல்லா இடங்களிலும் அரசுக் கல்லூரிகளைத் தொடங்கவேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருந்தாலும்கூட, நடைமுறை சாத்தியக் கூறுகளைப்பற்றி வருங்காலங்களில் அரசு யோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

திரு. க. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழக சட்டப் பேரவைக் கட்டடத்தைக் கட்டித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய துணைக் கேள்வியைக் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *2006–2007* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரில் எங்களது ஜெயங்கொண்டம் தொகுதிக்கு பாலிடெக்னிக் கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டிருந்தேன். அப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அமைத்துத் தருவதாகக் கூறி, 'ஜெயங்கொண்டத்தார் ஜெயம் கொள்வார்' என்றும் சொன்னார்கள். எனவே, பாலிடெக்னிக் கல்லூரியை அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரவர்களையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, *27* பலவகைக் கல்லூரிகளை உருவாக்குவதற்கான முடிவும், உத்தரவும், நிதியும் வந்தவுடன், ஜெயங்கொண்டம் போன்ற பகுதிகளுக்கு அது விஸ்தரிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *24*, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

அடுக்குமாடிப் பேருந்து

***64278—திரு. எல். ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் அடுக்குமாடிப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,